1994 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வினா எண் 417, திரு. நா. சா. பழனிசாமி, இருக்கையில் இல்லை.*

வினா எண் 418, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

418—

கீழப்பாவூர் ஒன்றியம், கரிசலூர் குடிநீர்த் தொட்டியை விரிவுபடுத்துதல்.

**20659—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கரிசலூர் கிராமத்திலுள்ள குடிநீர்த் தொட்டியை விரிவுபடுத்தி, கூடுதலாக குடிதண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கரிசலூர் கிராமம் பகுதியளவு குடிநீர் பெற்ற கிராமமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் வாரிய விதிகளின்படி நிதி நிலைக்கேற்ப குடிநீர்த் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழப்பாவூர் ஒன்றியம், கரிசலூர் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை. அதாவது பொது மக்கள் வசதிக்காக 10 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த வாட்டர் டாங்க் கட்டப்பட்டது. ஆனால் அது விரிவுபடுத்தப்படாததால் அந்த ஊர் மக்களுக்கு குடிதண்ணீர் போதுமானதாக இல்லாமல் அவர்கள் அல்லல்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் இதுபோன்ற பல்வேறு வாட்டர் டாங்க்ஸை, ஜனத்தொகைக்குத் தகுந்தாற்போல, அந்தந்தச் சமயத்தில் விரிவுபடுத்தாததால் கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது. எனவே, இவற்றை விரிவுபடுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றைக்கு குடிநீர்த் திட்டத்தைப்

பொறுத்தவரையில் குடிநீர் கிடைக்கப்பெறாத இடம் என்றும், பகுதி அளவு குடிநீர் கிடைக்கப்பெறுகிற இடம் என்றும், முழுமையாக குடிநீர் கிடைக்கப்பெறுகிற இடம் என்றும் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தக் கிராமம் பகுதி அளவு குடிநீர் கிடைக்கப்பெறுகிற கிராமமாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்தக் கிராமத்தில் சுமார் 5000 லிட்டர் கொள்ளளவு இருக்கிற நீர்த்தேக்கத் தொட்டி வாயிலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தொட்டிக்கு நீராதாரமாக ஒரு மின்விசை மோட்டார் பொருத்தப்பட்ட ஆழ்குழாய்க் கிணறும், இரண்டு திறந்தவெளிக் கிணறுகளும் அந்தக் கிராமத்தில் இன்றைக்கு இருந்து வருகிற காரணத்தால், நடப்பு நிதியாண்டில் மேலும் விரிவுபடுத்துகிற நிலை, திட்டம் எதுவுமில்லையென்பதைச் சொல்லி, வருகிற நிதியாண்டில் நிதி நிலைக்கேற்ப குடிநீர் வடிகால் வாரியம் அதற்குண்டான ஆய்வுகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிதண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பல இடங்களில் வாட்டர் டாங்க் கட்டப்பட்டு, ஆழ்குழாய்க் கிணறுகள் பெயிலியர் ஆகிவிடுகின்றன. ஆகவே, தண்ணீர்ப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது. முக்கியமாக கரிசலூர் கிராமத்தின் அருகிலுள்ள பூலாங்குளம், பெத்தநாடார்பட்டி, செல்லத்தாயார்புரம், திப்பாணாம்பட்டி, வி.கே.புதூர், சுரண்டை இந்தப் பகுதிகளில் இணைப்பாக, ஆழ்குழாய்க் கிணறு இல்லாமல், பெர்மனென்ட் சோர்ஸ் என்று சொல்லக் கூடிய அளவுக்கு, நிரந்தரத் தீர்வு காண்பதற்கு, அங்கேயிருக்கிற கடனா நதியிலிருந்து நீர் கொண்டு வர ஒரு திட்டம் ஏற்கனவே போடப்பட்டது. அந்தத் திட்டத்தின் மூலமாக இந்தக் கிராமங்களுக்கு எல்லாம் அதை இணைத்து அங்கேயிருக்கிற சேர்ந்தமரம் வரை அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில், கரிசலூர் கிராமத்திற்கு பகுதி அளவு குடிநீர் கிடைக்கப்பெற்றிருப்பது சம்பந்தப்பட்டது. அதற்குக் கூடுதலாக குடிநீர் கிடைக்கப்பெற வேண்டும் என்று சொன்னார்கள்.

1994 ஏப்ரல் 27]

இந்த மூலக்கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு துணைக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும், நேற்று என்னுடைய துறையினுடைய மானியக் கோரிக்கையிலே இதுபற்றித் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின் பேரிலே, இன்றைக்கு நீர் ஆதாரம் இல்லாமல் இருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சுமார் 2175 என்று தமிழகத்திலே கணக்கு எடுக்கப்பட்டு, அதற்காக இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் நிரந்தர நீர் ஆதாரம் பெறுகிற அளவிலே, இந்த ஆண்டு மட்டும் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற அந்தக் கிராமங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 419, திரு எஸ். ஆசைமணி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

419—

மயிலாடுதுறை தாலுகா, மேல அகலங்கண் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்குக் குடியிருப்பு மனைப்பட்டா வழங்குதல்.

** 23092—திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தாலுகா, மேல அகலங்கண் கிராமம், மேல் ஆதிதிராவிடர் தெருவில் வசிப்பவர்களுக்கு "இலவச குடியிருப்பு மனைப்பட்டா" வழங்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள மேல அகலங்கண் கிராமத்தில் நீண்டகாலமாக மேல் ஆதிதிராவிடர் தெருவில் வசிக்கின்ற ஆதிதிராவிடர்களுக்கு கூடிய விரைவில் இலவச குடியிருப்பு மனைப் பட்டாவினை வழங்க வேண்டும். நம்முடைய போற்றுதலுக்குரிய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அவர்களுக்கு